மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனம்
கொழும்பு பல்கலைக்கழகம்
வெற்றிடங்கள்

கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனத்தில் வெற்றிடமாக உள்ள பின்வரும் பதவிகளுக்காக தகைமைகளை பூர்த்தி செய்த தனி நபர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தொடர்புடைய சான்றிதழ்களின் பிரதிகளுடன் சேர்த்து முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை, 2026.11.23 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் நிறுவனத்திற்கு கிடைப்பதற்கு சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/ நிறுவனங்கள் மற்றும் பொது நிர்வாகம், மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனம், இல. 160, பேராசிரியர் நந்ததாச கொடகொட மாவத்தை, கொழும்பு 07 என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரர்கள் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்பப் படிவம் மற்றும் மேலதிக விபரங்களை மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவன இணையதளத்தில் இருந்து (https://pgim.cmb.ac.lk) பெற முடியும். பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தில் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் மாத்திரமே கருத்தில் கொள்ளப்படும்.

முழுமை பெறாத அல்லது தகைமைகள் மற்றும் அனுபவத்தை உறுதி செய்யும் சான்றிதழ்களின் உறுதி செய்யப்பட்ட நிழற் பிரதிகள் உட்பட போதிய விபரங்கள் இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தாமதித்து சமர்ப்பிக்கப்படுபவை ஏற்கப்படமாட்டாது என்பதோடு நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் எந்த ஒரு சூழலிலும் கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

01. முகாமைத்துவ உதவியாளர் பதவி (கணக்குப் பதிவு) தரம் III

தகைமைகள்

1. க.பொ.த. (சா/த) பரீட்சையில் பின்வரும் பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
   i. சிங்கள மொழி/ தமிழ் இலக்கியம்
   ii. ஆங்கில மொழி/ ஆங்கில இலக்கியம்
   iii. கணிதம்
2. க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஒரே அமர்வில் (பொதுப் பரீட்சை நீங்கலாக) அனைத்துப் பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

பின்வருவனவற்றில் சித்தி பெற்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

(a) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் இருந்து ஆறு (06) மாதங்களுக்கு குறையாத காலத்தைக் கொண்ட கணினி பயன்பாட்டில் ஏற்க முடியுமான தகைமை ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

மற்றும்

(b) கணினி பயன்பாட்டுப் பொதிகளைப் பயன்படுத்தியதில் இரண்டு ஆண்டுகள் அனுபவம்.

* பதவிக்கு உரிய பிரத்தியேக தகைமைகள்

- திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சின் கீழ் இலங்கை தொழில்நுட்பக் கல்லூரி/ தொழில்நுட்பவியல் கல்லூரியின் கணக்கியல் தொழில்நுட்பவியலாளருக்கான தேசிய சான்றிதழ் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் இருந்து பெறப்பட்ட வேறு ஓர் இணையான தகைமை.

அல்லது

- வர்த்தகத் துறையில் க.பொ.த. (உ/த) தகைமையை பெற்றிருத்தல் வேண்டும்.

குறிப்பு: தகைமை

a) இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

b) சிறந்த பண்புடையவராக இருத்தல் வேண்டும்.

தேர்வு : எழுத்துமூல பரீட்சை, நடைமுறைப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை

சம்பள அளவு : 2025.01.01 தொடக்கம் 2025.04.01 இன்படி ரூபா 49,475 – 17 x 540 - 58,655 p.m. [U MN 1(III)]

பணிப்பாளர்
மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனம்,
இல. 160, பேராசிரியர் நன்ததாச கொடகொட மாவத்தை,
கொழும்பு 07.
2026.10.29